### தமிழர் வரலாற்றுச் சுவடிகளைப் பதிப்பித்த

# தமிழ்த்தாத்தா உ.வே.சா. பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 20-

‘தமிழ்த்தாத்தா’ உ.வே.சா. அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



தொல்லியல் சான்றுகளால் இன்று நாம் மெய்ப்பித்து வரும் தமிழின் தொன்மையையும் பண்டைத் தமிழரின் வாழ்வியலையும் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியே வெளிக்கொணர்ந்த ‘தமிழ்த் தாத்தா’ உ.வே.சா. அவர்களின் பிறந்தநாள் இன்று!

**மண்ணிலும் தீயிலும் மறைந்து போகவிருந்த தமிழர் வரலாற்றுச் சுவடிகளைப் பதிப்பித்த அவரது செம்பணி தமிழுள்ளமட்டும் நன்றியோடு போற்றப்படும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மாவட்டத்தில் பிப்ரவரி – 21,22 தேதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றிட வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், பிப். 20-

கடலூர் மாவட்டத்திற்கு நாளை மற்றும் நாளை மறுநாள் (21,22 ஆகிய தேதிகளில்) பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் களஆய்விற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. அது சமயம் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் , பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நாளை (பிப்ரவரி- 21.02.2025) வெள்ளிக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் கடலூர் மஞ்சை நகர் மைதானத்தில் நடைபெறும் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு அரசு நலத்திட்ட பணிகள் துவக்க விழா, அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு கீழ்க்கண்ட இடங்களில் வரவேற்பு நிகழ்ச்சிகள் ,கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட், கடலூர் மணிக்கூண்டு, டவுன் ஹால், மஞ்சக்குப்பம் மைதானம், உட்லான்ஸ் ஹோட்டல், நியூ சினிமா, அண்ணா மேம்பாலம், உழவர் சந்தை, TPTC டெப்போ,

KV டெக்ஸ்டைல்ஸ், மங்கை மஹால், கடலூர்OT மணிக்கூண்டு, பச்சையாங்குப்பம் இரட்டை ரோடு, கண்ணாரபேட்டை,சேடப்பாளையம், குள்ளஞ்சாவடி, தம்பிப்பேட்டை , குறிஞ்சிப்பாடி ரயில்வே கேட் சந்திப்பு, வடலூர் பேருந்து நிலையம், வடலூர் ரயில்வே கேட், வடலூர் கண்ணு தோப்பு பாலம் வரையும், மறுநாள் கடலூர்மாவட்டம்,வேப்பூர் திருப்பயரில் நடைபெறும் பெற்றோரை கொண்டடுவோம் மண்டல மாநாட்டிற்கு செல்லும் வழியில் 22.02.2025 சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி அளவில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நெய்வேலி மந்தார குப்பம் பேருந்து நிலையம் ,ஊமங்களம், அரசக்குழி, வி. சாத்தமங்கலம்வரை ஆகிய இடங்களில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அதுசமயம் அவர்அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்டகடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி,

வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் சென்னையில் தலைவர் 72 இன்டர் விங்க்ஸ் கிரிக்கெட் போட்டி பிப்ரவரி 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெற்றது, அதில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர் இந்திரா, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் சத்யா ஆகியோர் அணி மாநில அளவில் வெற்றி பெற்று முதல் இடத்தை வென்றதையொட்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயனை அவர்களை நேரில் சந்தித்து பரிசினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர், அவர்களுக்கு புத்தகம் பரிசாக வழங்கி உற்சாகப்படுத்தினார்.





விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் நெய் குப்பி, தாதாபுரம் ஆகிய ஊராட்சிகளில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., ஆரணி எம்.பி .தரணி வேந்தன் ஆகியோர் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய துணை சேர்மன் ராஜா ராமன் ,பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் படிக்கும் – நமது 43 லட்சம் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் வைத்து

# நம்முடைய பணம் 2,151 கோடி ரூபாயை நாம் கேட்கிறோம்!

## “மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நிதி’ எனும் ஒன்றிய அரசின் கருத்தினை எதிர்த்து – பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எழுச்சியுரை!

சென்னை, பிப். 20 -

மும்மொழிக் கொள்கையினை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நிதி வழங்கப்படும் என்ற ஒன்றிய அரசின் கருத்தினை எதிர்த்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுச்சியுரை ஆற்றுகையில், ‘‘தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளில் படிக்கக் கூடிய 43 லட்சம் பிள்ளைகளின் எதிர்காலத்தை மனதில் வைத்து, நம்முடைய பணம் 2151 கோடி ரூபாயினை நாம் கேட்கிறோம்!’’ என்று குறிப்பிட்டார்.

சென்னை - துறைமுகம் பகுதியில் - ஒன்றிய சுங்கத் துறை அலுவலகம் அருகில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் நேற்று மாலை நடைபெற்ற மாபெரும் கண்டனக் கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசியதாவது:-



என்னுடைய அரசியல் ஆசான் தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த பிப்ரவரி 2024ஆம் ஆண்டு மக்களால் நேசிக்கப்படக்கூடிய முதலமைச்சர்களின் பட்டியலில் ஏறத்தாழ36 சதவீதம் பெற்று 2025 இதே பிப்ரவரி மாதத்தில் அது 57% மக்களால் நேசிக்கப்படுகின்ற முதலமைச்சர் என்கின்ற அந்த சிறப்பைப் பெற்று ஏறத்தாழ இடைப்பட்ட அந்த 21 சதவீதத்தில் நான் பெருமையோடு சொல்வேன் அந்த 21 சதவீத்தில் 11 சதவீதம்கல்வி சார்ந்து பயன்பட்டிருக்கின்ற அந்த நேசிப்பாளர்கள் அதிகம் உண்டு என்கின்ற அந்த வகையிலே இன்றைக்கு எங்களுடைய தலைவருடைய வழிகாட்டுதலின்படி இன்றைக்கு ஒன்றிய அரசுக்கு நாம் எழுப்பக்கூடிய இந்த கண்டனக் கூட்டத்தில் உங்களோடு இணைந்து நானும் பங்கேற்றுக் கொண்டிருக்கின்றேன்.

குறிப்பாக சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் நமக்கான குரலாக ஒலிக்கிறார்கள் என்று சொன்னாலும் துறையினுடைய அமைச்சராக நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சருடைய வழிகாட்டுதலின்படி மக்களிடம் அந்த விவாதங்களை எடுத்து வைக்க வேண்டும் மக்களிடம் நீதியை கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு இதற்கான நோக்க உரையை ஆற்ற நாங்கள் இங்கே வருகை தந்திருக்கின்றோம். குறிப்பாக இரண்டு மூன்று நாட்களாக நடக்கிற செய்தியை தமிழ்நாடு முழுவதும் நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

அதுவும் குறிப்பாகப் பார்த்தால் இன்னும் உதாரணத்தோடு சொல்லலாம் இயேசுநாதர் இறந்த பிறகு மூன்றாவது நாள் அவர் உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கை உண்டு. அதே போலத்தான் மூன்று முறை மொழிப்போர் நடந்து ஏறத்தாழ 1986க்கு பிறகு 39 ஆண்டுகளுக்கு பிறகு நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் தலைமையில் இன்னொரு மொழிப்போர் இன்றைக்கு நாம் தயாராகிக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லும்பொழுது இந்த மூன்று நாட்களாக ஒன்றிய அமைச்சர் மரியாதைக்குரிய தர்மேந்திர பிரதானின் அந்த குரலை பார்த்ததற்கு பிறகு நம்முடைய தமிழ் மண்ணில் தங்களுடைய இன்னுயிரை ஈத்து இணைத்து காற்றோடு காற்றாக கலந்து நமக்கு உயிர் மூச்சாக இருக்கின்ற நடராஜன்களும், தாளமுத்துக்களும், உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று சொன்ன பீளமேடை சார்ந்த தண்டபாணி போன்றவர்களும், மாணவர் ராஜேந்திரன்களும், கீழப்பழுவூர் சின்னசாமி போன்ற அந்த உயிரெல்லாம் மீண்டும் உயிர்த்தெழ ஆரம்பித்து இருக்கின்றது. அவர்கள் உங்களுடைய உருவில் இங்கே நின்று கொண்டிருக்கின்றார்கள். மேடையில் இருக்கின்ற இவர்கள் ஒவ்வொருவரும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞருடைய மறுவுருவாக இவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறார் என்று சொல்லும் ம்பொழுது ஒட்டுமொத்தமாக உணர்ச்சிவசப்பட்டவனாக தான் இன்று நான் உங்கள் முன்பு நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

காரணம் என்ன? இதற்கு யார் காரணம் என்று சொன்னால், மூன்று நாட்களுக்கு முன்பு ஒன்றிய அமைச்சர் சொல்கிறார், ஏன் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் என்ன குறைச்சல்? அதை நீ ஏற்றுக்கொண்டால் தான் நான் நிதி தருவேன் என்று சொல்லி,“They have to come to the terms of the constitution of India” என கூறியிருக்கிறார். constitution of India என்ன சொல்கிறது? WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizens என்று சொல்கிறது. அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் பொறுத்த வரையில் JUSTICE ஆக இருந்தாலும் சரி, LIBERTYஆக இருந்தாலும் சரி,; EQUALITYஆக இருந்தாலும் சரி,; FRATERNITYஆக இருந்தாலும் சரி, ஒரு மனிதன்தன்னுடைய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று வகை வகையாக பிரித்துக் கொடுத்திருக்கிறார். பொழுது போகவில்லை என்று உட்கார்ந்து எழுதிய அரசியல் சாசனம் இல்லை அது, பொழுது போதவில்லையே என்று மக்களை மனதில் வைத்து ஒரு நாளைக்கு 18 மணி நேரம் இதற்காக செலவு செய்த அண்ணல் அம்பேத்கருடைய சாசனம், அந்த சாசனத்தில் எங்கு மும்மொழிக் கொள்கையைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

**இந்தியாவின் முதல் குரல் நமது முதல்வர் குரல்!**

It is Rule of Law என்று சொல்கிறார். இதில் Rule எங்கே இருக்கிறது, Law எங்கே இருக்கிறது மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் பணம் தருவேன் என்று எங்கு உள்ளது. தேசிய கொள்கைக்கும், நமக்கு எப்பொழுதும் வருட வருடம் வரவேண்டிய சமக்ர சிக்ஷ அபியான் நிதிக்கும் சம்பந்தமே கிடையாது. இந்த இரண்டையும் குழப்பிக்கொண்டு இதற்கு ஒப்புக் கொண்டால் தான் இதற்கு பணம், அதை ஒப்புக் கொண்டால் தான் அதற்கு பணம் என சொல்வது, நடிகர் அஜித்குமார் நடித்த ஒரு படத்தில் ஆட்டோ Side Mirrorஐ சரி செய்தால் தான் வண்டி Start ஆகும் என்று சொல்வது போல் உள்ளது. ஆக எதற்குமே அர்த்தம் இல்லாமல் உங்கள் கொள்கையின திணிக்க வேண்டும் என்கிற விதத்தில் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்கு எங்கள் தமிழக முதல்வர் குரல் தான் ஒட்டுமொத்த இந்தியாவிலேயே முதல் குரலாக ஒலித்திருக்கிறது.

இன்னொருத்தர் இருக்காரு, ஒன்றியத்தினை ஆண்டு கொண்டிருக்கின்ற தேசியக் கட்சியின் மாநிலத் தலைவர். அவர் ஆங்கிலத்தில் தான படிக்கப் போனாரு, ஆறு மாசம் வெளிநாட்டில் போய் Course of Goebbles படிச்சிட்டு வந்து இங்க சும்மா வாயைத் திறந்தால் பொய், பொய், பொய். ஆனால் நம்மை சொல்கிறார் நாம் பொய் சொல்கிறோம் என்று. ஒரு Report வைத்திருக்கிறார் ASER Report, அந்த ASER Report பற்றி உங்களுக்கு என்ன தெரியும். அந்த ASER Report தமிநாட்டைக் காட்டிலும் உத்திரப் பிரதேசமும், பீகாரும் கல்வியில் சிறந்து விளங்கு கிறது. நீங்கள் இரு மொழிக் கொள்கையை வைத்துக் கொண்டு என்னத்தைக் கிழித்தீர்கள். ASER Report என்பதே பாரதிய ஜனதா கட்சியின் ஒரு Agenda. கிட்டத்தட்ட ஒரு வருஷத்தில் 25,000 பள்ளிகளை அரசு பள்ளிகளை மூடிட்டு 15,000 தனியார் பள்ளிகளை கொண்டு வந்த காரணம் எது தெரியுமா அந்த ASER Report தான்.அந்த ASER Reportஐ சொல்லிச் சொல்லி தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா அரசுப் பள்ளிகளையும் மூடிவிட்டு இங்கே தனியார் பள்ளிகளை வளர்த்து விட்டு தாங்கள் நினைக்கக் கூடிய மொழிகளை உள்ளே கொண்டு வரவேண்டும் என ஆசைப்படுகிறார்கள் அதுதான் ASER Report.

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், 2014ல் எதற்கெடுத்தாலும் குஜராத் மாடல், குஜராத் மாடல், குஜராத் மாடல் என்று கூறினார்கள். நாம் குஜராத்திற்கே சென்றிருக்க மாட்டோம் ஆனால் நாமும் குஜராத் மாடல் என்று சொன்னோம். அந்த ஒரு வருடம் நாம் ஏமாந்தோம், ஆனால் 2019 முதல் 2024 வரை நடந்த தேர்தல்களில் எல்லாம் அவர்களை ஓட ஓட விரட்டியடித்த மாநிலம் நம் தமிழ்நாடு தான். அந்த மாநிலத் தலைவர் சொல்கிறார், இங்கே ஆண்ட கட்சி, ஆளுகின்ற கட்சி, புதிதாக வந்த கட்சி, கனவு காணுகின்ற கட்சியெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சியாகிய நாங்கள் இந்த மும்மொழிக் கொள்கையை கொண்டு வந்தே தீருவோம், நாங்கள் தனிமையாக இருந்தே கொண்டு வருவோம் என்று. நீங்கள் தனிமையாகவெல்லாம் இல்லை, ஓட ஓட விரட்டி தனிமைப்படுத்தப்பட்டவர்களாக உங்கள் குரல் இருக்கிறது என்பதனை நீங்கள் மறந்து விடக்கூடாது.

நீங்கள் இந்த ரிப்போர்ட் அந்த ரிப்போர்ட் என்று சொல்லி எங்கள் பிள்ளைகளை நீங்கள் கேவலப்படுத்தாதீர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித் தருகின்ற என்னுடைய பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களை நீங்கள் கேவலப்படுத்தாதீர்கள். எங்களுடைய சிஸ்டத்துக்கு Internal Assesment நாங்கள் பார்க்கிறோம். Statutory Body மூலமாக நாங்கள்Survey பண்ணுகிறோம். Third Party மூலமாக நாங்கள் Survey பண்ணுகிறோம்.எங்களுடைய மாநிலத் திட்டக் குழு 10 இலட்சம் குழந்தைகளை மதிப்பிடுகிறோம். நாங்கள் உங்களுக்கு Report தருகிறோம். ஆக இப்படி இன்றைக்கு எங்களை ஏமாற்றக்கூடிய அந்த பணியை நீங்கள் செய்து கொண்டு இந்த 2151 கோடி ரூபாய் தராமல் இருக்கிறீர்கள்.ஒரு ரூபாய் கொடுத்தால் 29 பைசா தருகிறோம் என கூறிக் கொண்டிருக்கிறார்கள் தற்போது அதுவும் நமக்கு கிடையாது.எங்கள் துணை முதலமைச்சர்இது உங்கள் அப்பன் வீட்டு பணமா? என்று கூறியதற்கு உங்களுக்கு கோவம் பொத்துக்கொண்டு வந்ததே? இன்று நாங்கள் கேட்கிறோம்; இது உங்கள் அப்பன் வீட்டு பணமா?

**43 இலட்சம் பிள்ளைகளின் எதிர்காலம்!**

எங்களது 2151 கோடி ரூபாய் பணத்தை எங்களுக்குக் கொடுங்கள். 43 இலட்சம் பிள்ளைகளின் எதிர்காலம் இதில் அடங்கியிருக்கிறது, அவர்கள் தலையில் கை வைக்காதீர்கள். அவர்களது வயிற்றில் அடிக்காதீர்கள். ஒன்றிய அரசுக்கு நாங்கள் வைக்கின்ற மிகப்பெரிய எச்சரிக்கையாக, கண்டனமாக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அதற்கான பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒரு கடிதம் வைத்துள்ளார்கள். நீங்கள் தான் மும்மொழிக் கொள்கையை ஒத்துக் கொண்டீர்களே? ஒத்துக் கொண்ட பிறகு இப்போது இல்லை என்கிறீர்களே? இது எப்படி நியாயம் என்று அந்தக் கடிதத்தினைக் காட்டி கேட்கின்றனர். நமது தலைமைச் செயலாளரது கடிதத்தில் இந்த ஒப்பந்தத்தினை குறிப்பிட்டு, Inthis regard a state level committee headed by school education secretary has been constituted. Based on the Recommendation of the committee..... என தெரிவித்துள்ளதனை அனைவரும் மறந்து விடுகிறார்கள். அந்த committeeயில் என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ, அதனடிப்படையிலேயே ஒத்துக் கொள்வதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் ஒருவர் உங்களுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறும் பொழுது, நாம் நமது உடல் நலத்தினை பற்றி நன்றாகத் தெரிந்த குடும்ப மருத்துவரிடம் ஒப்புதலினைப் பெற்று பின்னர் முடிவு செய்கிறேன் என்று கூறுவோம் அல்லவா, அது போன்ற கருத்தினை திரித்து எழுதிய பத்திரிக்கைத் துறை ஊடகத்துறை நண்பர்களுக்கு தர்மேந்திர பிரதான் கடிதத்தில் எழுதுகிறார் ”I was surprised see that, the state responded with a modified MOU vide letter dated wherein key paragraph referring to the implementation of NEP 2020 in entirety has been draught.” அவர்கள் ஒரு MOUவினை அனுப்பி அதில் NEP 2020யினை ஒத்துக் கொள்கிறேன் என கையொப்பம் இடச் சொல்கிறார்கள். அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் NEP 2020யினை ஒத்துக் கொள்கிறேன் என்ற பகுதியினை நீக்கி விட்டு தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு ஒரு MOUவினை அனுப்புகிறார்கள். அதற்கு தர்மேந்திர பிரதான் நாங்கள் ஒரு MOU வினை அனுப்பினால் ‘‘நீங்கள் ஒரு MOUவினை அனுப்பி வைக்கிறீர்களே’’ எனக் கூறுகிறார். இதற்கு பெயர் தான் ஒத்திசைவு. இருவரும் பேசித் தீர்த்து முடிவெடுப்பது தான் Concurrent List, ஆனால் உங்களுக்கு Concurrent Listம் தெரியவில்லை, ஒத்திசைவும் தெரியவில்லை, எல்லாத்தையும் மூடி மறைக்கின்ற Secret List மட்டுமே தெரிகிறது. அதனால்தான் நீங்கள் எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்நீங்கள் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும், யாரை வேண்டுமானா லும் ஏமாற்றலாம். இங்கே எங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை ஏமாற்றுவதற்கு ஒருவர் பிறந்து தான் வர வேண்டும்.

**மக்களின் மனப்பான்மை!**

நாங்கள் தர்மேந்திர பிரதான்அவர்களை இரண்டு முறை நேரில் பார்த்து கோரிக்கை விடுத்தோம். ஏன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறீர்கள் மும்மொழிக் கொள்கையினை ஏற்றுக் கொண்டால்தான் என்ன என்று சொன்னீர்கள். எங்களது மாநில மக்களின் மனப்பான்மை எங்களுக்குத் தெரியும், ஒட்டுமொத்த உலகத்திலேயே ஒரு மொழிக்காக தங்களுடைய உயிரை நீத்த ஒரே மாநிலம் எது என்று சொன்னால் அது தமிழ்நாடுதான் என நாங்கள் எடுத்துச் சொல்கிறோம் ஆனால் நீங்கள் உங்களுடைய எஜமான் என்ன சொல்கிறாரோ அதைத் தான் நீங்கள் கேட்டு இருக்கீறீர்கள். Let me be very crystal clear, we reject NEP 2020, we reject PM Shri School, we reject Hindi imposition என்பதை நான் தைரியமாகச் சொல்கிறேன். Tamilnadu will never go to the central government hegemony, and again I am telling our education, our identity, and what are the thing our language, what are we likes here following definitely we will stand for and stabilisation uncompromisely we stand for the Dravidian land.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த 2151 கோடி ரூபாய் நமக்கு கிடைக்கின்ற வரைக்கும் தி.மு.க. கேட்கக் கூடிய பணமல்ல - ஒட்டு மொத்தமாக 43 லட்சம் பிள்ளைகள் அரசு பள்ளியில் படிக்கக்கூடிய பிள்ளைகளுடைய எதிர்காலத்தை மனதில் வைத்து நம்முடைய பணத்தை நாம் கேட்கிறோம் என்ற அந்த உணர்வோடு நீங்களும் ஒன்று கூட வேண்டும் என்று சொல்லி இந்த அருமையான ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்ற அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும் கழகத்தினுடைய மாவட்ட செயலாளர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்து இந்த உரையினை நான் நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு - பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி உரையாற்றினார்.